தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காற்றழுத்தத் தாழ்வு நிலை: கடலோர மாவட்டங்களில் மழை வாய்ப்பு

**சென்னை,**

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை (பிப்.24) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தை ஒட்டியுள்ள வங்கக் கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (பிப்.23) குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்தது. சென்னையின் ஒரு சில இடங்களிலும் லேசான மழை பெய்தது.

இந்நிலையில் காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும் என்று வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் உள்மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. திங்கள்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): மரக்காணம், ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி - 30, சிதம்பரம், ராமநாதபுரம், வேதாரண்யம், நாகப்பட்டினம் - 20, சீர்காழி, பரங்கிப்பேட்டை, தூத்துக்குடி - 10.

### நத்தத்தில் சாரல் மழை

**நத்தம்,**

கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக இரவில் பனிப்பொழிவு தன்மை குறைந்து பகலில் கடும் வெப்பமும்

தணிந்து மேகம் சூழ்ந்து காணப்பட்டு வந்தது. இதைத்தொடர்ந்து திங்கள்கிழமை காலையில் திடீரென மேகம் திரண்டு நத்தம், செந்துறை பகுதிகளில் சாரல் மழை விழுந்தது . கனமழை பெய்தால் விவசாயத்துக்கு உதவும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோவையில் 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறப்பு**

**கோவை,**

கோவை மாநகராட்சிப் பகுதியில் 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை விடியோ கான்ஃபரசிங் முறையில் முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

கோவை மாவட்டத்தில் பூமார்க்கெட், தடாகம் சாலை, ஆவின் பாலக வளாகம், தெலுங்குபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க வளாகம், சிந்தாமணி தலைமையகம், சாய்பாபா காலனி என்.எஸ்.ஆர். சாலை - சிந்தாமணி மண்ணெண்ணெய் வழங்கும் நிலைய வளாகம், கோவை மாவட்ட நூலக ஆணைக் குழு கட்டட வளாகம் - டவுன்ஹால், கோவை மாநகராட்சி வணிக வளாகம் - டாடாபாத், லூகாஸ் - துடியலூர், ஒண்டிபுதூர் நகரக் கூட்டுறவு கடன் சங்க வளாகம் ஆகிய 10 இடங்களில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு தொண்டாமுத்தூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், காரமடை மற்றும் நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலம் அப் பகுதி விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை அவர்களின் பண்ணைகளுக்கு நேரில் சென்று கொள்முதல் செய்யப்படும்.

விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகள் கொள்முதல் செய்வதால், தரம்

நிறைந்த காய்கறிகள் குறைந்த விலையில் கிடைப்பதுடன், விவசாயிகள் எதிர்கொள்ளும் ஏற்றுக்கூலி, இறக்குக் கூலி, போக்குவரத்து செலவு, காய்கறி மண்டி கமிஷன் ஆகியவை தவிர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு நியாயமான லாபம் கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் தினமும் (ஞாயிற்றுக்கிழமை தவிர) காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் செயல்படும்.

கோவை சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையில் நவீன பல்பொருள் அங்காடி திறப்பு விழாவில் சிந்தாமணி கூட்டுறவு பண்டக சாலை தலைவர் சிங்கை முத்து, கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளர் சஜ்ஜன் சிங், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஆர்.ராமமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கறிக்கோழி விலை ரூ.69

**பல்லடம்,**

பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோஆர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.68 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.69 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.25, சென்னையில் ரூ.3.55.

## 27 இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

**திருப்பூர்,**

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வியாழக்கிழமை (பிப்.27) நடைபெற உள்ளது. இது குறித்து, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:

பிப்ரவரி மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை (பிப்.27) காலை 11 மணியளவில் நடைபெற

உள்ளது. இதில், திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றார்.

**பல்லடத்தில் பசுமை காய்கறிகள் கொள்முதல் நிலையம் துவக்கம்**

**பல்லடம்,**

பல்லடம் உழவர் பணிக் கூட்டுறவு சங்க வளாகத்தில், தமிழக அரசின் பசுமை காய்கறிகள் கொள்முதல் நிலைய துவக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு, சங்கத் தலைவர் ஏ.எம்.ராமமூர்த்தி தலைமை வகித்தார். பல்லடம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எம்.கே.ஆறுமுகம், நகராட்சி துணைத் தலைவர் வைஸ் பி.கே.பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் சரளை பி.ரத்தினசாமி வரவேற்றார். பசுமை கொள்முதல் நிலையத்தை எம்எல்ஏ கே.பி.பரமசிவம் துவக்கி வைத்தார்.

விழாவில் கூட்டுறவு கள அலுவலர் மாணிக்கவாசகம் பேசியது: பல்லடம், பொங்கலூர் ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்ய பசுமை காய்கறிகள் கொள்முதல் மையம் துவக்கப்பட்டுள்ளது. இந்த மையம் தினசரி காலை 7 மணி முதல் இரவு 7மணி வரை செயல்படும் என்றார்.மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தண்ணீர்பந்தல் ப.நடராஜன், த.கிருஷ்ணகுமார், கூட்டுறவு வங்கி தலைவர் ஏ.சித்துராஜ், கூட்டுறவு துறை அதிகாரிகள் பாபு, கிருஷ்ணமூர்த்தி, சரசுமணி, செல்வராஜ் உள்பட பலர் பங்கேற்றனர். விழாவில், பணிக்கம்பட்டி ஊராட்சி பாலசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த விவசாயி தெய்வாத்தாள் என்பவரின் கறவை மாடு அன்மையில் கோமாரி நோய் தாக்கி இறந்தது. அந்த விவசாயிக்கு இப்கோ இன்சூரன்ஸ் நிறுவனத்தின் சார்பில் ரூ. 23 ஆயிரம் இழப்பீட்டுத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 44.02 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 44.02 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 684 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து

ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.1 டி.எம்.சி.

## திருவண்ணாமலையில் தொடர் தூறல் மழை

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையில் திங்கள்கிழமை காலை முதல் இரவு வரை தொடர்ந்து தூறல் மழை பெய்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஆட்சியர் அலுவலகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை காலை 10 மணியளவில் தூறல் மழை பெய்யத் தொடங்கியது. இது சில நேரம் கன மழையாகவும் பெய்தது. தொடர்ந்து, இரவு வரை தூறல் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தது.

திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்திலும் மழை நீர் தேங்கியது. ஹோட்டல்கள், பெட்டிக் கடைகளில் வியாபாரம் மந்த நிலையிலேயே இருந்தது.

வாகன ஓட்டிகள் தவிப்பு

இதைத் தொடர்ந்து, பெய்த தூறல் மழையால் வாகனங்களை சரிவர இயக்க முடியாமல் இருசக்கர, நான்கு சக்கர வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர்.

இருப்பினும், தூறல் மழையால் போதிய தண்ணீரின்றி பயிர்கள் காய்ந்து போவது தவிர்க்கப்படும் என்பதால் விவசாயிகள் பலர் மகிழ்ச்சி அடைந்தனர்.

## முட்டை ஏற்றுமதியை மேம்படுத்த நாமக்கல்லை தனி மண்டலமாக்க நடவடிக்கை

**நாமக்கல்,**

மக்களவை உறுப்பினராகத் தேர்வாகும்பட்சத்தில், முட்டை ஏற்றுமதியை மேம்படுத்திட நாமக்கல்லை தனி மண்டலமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள நாமக்கல் மக்களவைத் தொகுதி வேட்பாளர் பி.ஆர்.சுந்தரம் தெரிவித்தார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: நாமக்கல் மக்களவைத் தொகுதியில் போட்டியிட அதிமுக வேட்பாளராக என்னை அறிவித்ததற்கு தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

தற்போது தென்னக நதிகளை இணைக்க தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அவர் பிரதமராகும்பட்சத்தில் நாட்டிலுள்ள அனைத்து நதிகளும் இணையவும், மின்சார பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படவும் முடியும்.

எனவே, தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பிரதமராக்கிட இந்தத் தேர்தலில் தீவிரமாகக் களப் பணியாற்ற உள்ளோம்.

தற்போது நாட்டின் பிற பகுதிகளில் ஏற்படும் பறவைக் காய்ச்சல் நாமக்கல் முட்டை ஏற்றுமதித் தொழிலையும் வெகுவாகப் பாதிக்கிறது.

நான் மக்களவை உறுப்பினராக தேர்வாகும்பட்சத்தில், இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண நாமக்கல் முட்டை மண்டலத்தை தனியாகப் பிரித்து அறிவித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

தவிர, லாரி போக்குவரத்துத் தொழிலைப் பாதிக்கும் டீசல் விலையேற்றம், வரி விகிதங்கள் உயர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சேலம் - கரூர் அகல ரயில் பாதையை இரட்டை வழிப் பாதையாக மாற்றவும், வட மாநிலங்களுக்குச் செல்லும் விரைவு ரயில்களை நாமக்கல் வழியாக இயக்கிடவும், தமிழக ஜவுளித் தொழிலைப் பாதுகாக்க ஜவுளிக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## நிலத்தடி நீரை உறிஞ்சும் சீமைக் கருவேல மரங்களை அகற்றக் கோரிக்கை

**நாமக்கல்,**

உஞ்சனை ஏரியைச் சுற்றி வளர்ந்துள்ள நிலத்தடி நீரை உறிஞ்சும் சீமைக் கருவேலம் மரங்களை வேரோடு அகற்றிவிட்டு, பயன் தரக்கூடிய மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்செங்கோடு வட்டம், உஞ்சனை கிராமத்தில் சுமார் 90 ஏக்கர் பரப்பளவில் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியை நம்பி சுமார் 100 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன. ஆனால், கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கவனிப்பாரின்றி உள்ளதால், இந்த ஏரி முழுவதும் தற்போது சீமைக் கருவேலம் மரங்கள் சூழ்ந்து காணப்படுகின்றன. நிலத்தடி நீரை வெகுவாக உறிஞ்சக்கூடிய இந்த சீமைக் கருவேலம் மரங்களால் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள விவசாயக் கிணறுகள் நீரின்றி வறண்டு விட்டதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

தொடரும் இந்தப் பாதிப்புகளை அடுத்து, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் மலர்விழி தலைமையில் பொதுமக்கள் சிலர் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்தனர்.

மனுவைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள், இந்தக் கோரிக்கை குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் தீர்வு காண்பதாக உறுதியளித்தனர்.

## நெல்லுக்கான செஸ் வரியை ரத்து செய்ய வலியுறுத்தல்

**கரூர்,**

நெல்லுக்கான வேளாண்மை செஸ் வரியை ரத்து செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர் மற்றும் நெல்-அரிசி வணிகர்கள் சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

கரூரில் அச்சங்கங்களின் மாநில பொதுக்குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் டி. துளசிங்கம் தலைமையில் நடைபெற்ற, கூட்டத்துக்கு செயலர் ஏ.சி. மோகன், பொருளாளர் சி.பி. சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மத்திய நிதித்துறை அரிசிக்கு விதித்த சேவை வரியை ரத்து செய்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது, நெல்லிற்கு வேளாண்மை செஸ் வரியினை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் கரூர் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தர்மலிங்கம், செயலர் மாயன்பெருமாள், பொருளாளர் ஜெயராமன், நெல் அரிசி மொத்த

வியாபாரிகள் சங்கத் தலைவர் கந்தசாமி, செயலர் வெங்கட்ராமன், பொருளாளர் கண்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**"கோமாரி நோய் தடுப்பூசி பணி: மார்ச் மாதம் தொடங்கும்'**

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடும் பணி மார்ச் மாதம் தொடங்குகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 2013 செப்டம்பரில் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டு 5-வது சுற்று முடிவடைந்துள்ளது. தற்போது இம்மாவட்டத்தில் மார்ச் 1ஆம் தேதி முதல் 6-வது சுற்று தடுப்பூசிப் போடும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளது. மாவட்டத்தில் 70 ஆயிரம் கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்படும்.

இதுதொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து கிராமங்களிலும் பிப். 25ஆம் தேதி நடைபெறும் சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் பங்கேற்று கால்நடை உதவிமருத்துவர்கள் கூறும் அறிவுரைப்படி கால்நடைகளை மருத்துவர்களால் குறிப்பிடப்படும் தேதியில், குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

மேலும், கோமாரி நோயானது கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போர்க்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது.

இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலை திறன் குறைவு, கறவை மாடுகளின் சினை தடைப்படுவதோடு, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளினால் பொருளாதார இழப்பு அதிகம் ஏற்படும்.

இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கு பரவும் என அக்குறிப்பில் தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

**ரப்பர் விவசாயிகளுக்கு இன்று பயிற்சி முகாம்**

**குலசேகரம்,**

குலசேகரத்தில் ரப்பர் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை (பிப்.25) நடைபெறுகிறது.

இதுகுறித்து ரப்பர் வாரியம் குலசேகரம் அலுவலத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

குலசேகரம் எப்ஏசி அரங்கில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 வரை முகாம் நடைபெறுகிறது.

முகாமில் புதிதாக ரப்பர் நடவு செய்யும் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள்குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

இதில், ரப்பர் வாரிய அதிகாரிகள் பங்கேற்று பயிற்சி அளிக்கின்றனர். ரப்பர் விவசாயிகள் இப்பயிற்சியில் பங்கேற்று பயனடையுமாறு அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாரம்பரிய மரங்களை பாதுகாக்க சேவாலயா திட்டம்**

**கன்னியாகுமரி,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய மரங்களைப் பாதுகாக்க சேவாலயா அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அவ்வமைப்பின் தலைவர் சோபனராஜ், இயக்குநர் பெருமாள், உறுப்பினர்கள் சர்மா, அனந்தலட்சுமி ஆகியோர் கன்னியாகுமரியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

மலைப் பகுதிகள் நிறைந்த இம்மாவட்டத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களும் உள்ளன. இதுதவிர வன உயிரின சரணாலயம்,

பறவைகள் சரணாலயம், அணைகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்வளமும் இங்கு அமையப் பெற்றுள்ளன. இவை அனைத்துக்கும் ஆதாரமாக விளங்குவது மரங்களே. மரங்களின் சிறப்பு தெரியாததால் அவைகள் அழிக்கப்படுகின்றன. இன்றைய இளம் தலைமுறையினருக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு இதுகுறித்த விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான அரியவகை மரங்களை பாதுகாக்கவேண்டும் என்பதே சேவாலயா திட்டத்தின் நோக்கமாகும்.

இதுதொடர்பாக இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அடங்கிய பல்லுயிர் பரவல் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நமது பாரம்பரிய அடையாளங்களாக விளங்கும் மரங்களின் பெயர், அமைவிடம், அதன் சிறப்பு, புவிசார் குறியீட்டு எண், மரத்தின் அறிவியல் பெயர் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளது. சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் இணையதளம் உருவாக்கப்பட்டு மக்கள் தெரிந்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்படும்.

மேலும், தங்கள் பகுதிகளில் உள்ள மரங்கள் பற்றிய தகவல்களை அளிக்கவும், இத்திட்டத்தில் இணைந்து செயல்படவும் விரும்புவோர் 94439-09051 என்ற அலைப்பேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

**லேசான மழை: முந்திரி விவசாயிகள் கவலை**

**பண்ருட்டி,**

பண்ருட்டி சுற்று வட்டப் பகுதியில் திங்கள்கிழமை காலை முதல் லேசான மழை தொடர்ந்து பெய்தது. திடீரென பெய்த இம்மழையால் முந்திரி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில், கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம் பகுதியில் 28,500 ஹெக்டர் நிலப்பரப்பில் முந்திரி காடுகள் உள்ளன. இவற்றில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 22 ஆயிரம் மெட்ரிக் டன் முந்திரி கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மழையின்மை, கடும் பனிப்பொழிவு, வெப்பத்தின் தாக்கம் போன்ற தட்பவெப்ப நிலை மாற்றம் காரணமாக, கடந்த பல ஆண்டுகளாகவே முந்திரி விவசாயிகள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தானே புயல் தாக்கியதற்கு பின்னர் இந்த ஆண்டு பிஞ்சுகளுடன் பலா மரங்களும், பூத்துக் குலுங்கிய முந்திரி மரங்களும் விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டின. முந்திரியில் காய் பிடிக்கவும், பூச்சிகளை கட்டுப்படுத்த முதல் கட்ட மருந்து தெளிக்கும் பணியில் தீவிரம் காட்டிவந்தனர்.

இந்நிலையில், திங்கள்கிழமை திடீரென பெய்த மழை முந்திரி விவசாயிகளை கலங்க வைத்துள்ளது.

இது குறித்து முந்திரி விவசாயிகள் கூறியது: லேசான மழையால் முந்திரி மகசூலில் பாதிப்பும், பூக்களில் புழுக்களும் உற்பத்தியாகி பிஞ்சுகளை பாதிக்கச் செய்யும். அதிக அளவில் மழை பெய்தால் இந்த பாதிப்பில் இருந்து தப்பிப்பதுடன், புதிதாக பூ பூத்து காய் காய்க்கும் எனக் கூறினர்.

**வீடுர் அணை பாசனத்திற்காக திறப்பு**

**திண்டிவனம்,**

திண்டிவனம் அடுத்துள்ள வீடுர் அணையில் இருந்து பாசனத்திற்காக திங்கள்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

1959-ம் ஆண்டு தொண்டியாறு மற்றும் வராகநதி ஆற்றின் குறுக்கே வீடுர் அணை கட்டப்பட்டது. 4511 மீட்டர் நீளம் கொண்ட இந்த அணை 32 அடி நீர்மட்டம் கொண்டது. அணையின் முழுக்கொள்ளளவு 605 மி.க. அடியாகும்.

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் சிறுவை, வீடுர், பொம்பூர், கோரக்கேணி, எறையூர் உள்பட 11 பகுதிகளில் 2200 ஏக்கர் நிலத்திற்கும், புதுச்சேரி மாநிலத்தில் புதுக்குப்பம் காட்டேரிகுப்பம் உள்பட 5 பகுதிகளில் 1000 ஏக்கர் நிலப் பகுதிகளுக்கு பாசனத்திற்கு பயன்பட்டு வருகிறது.

2013-2014-ம் ஆண்டிற்கு திங்கள்கிழமை முதல் வரும் மார்ச் 10-ம் தேதி வரை அணையின் தலைப்பு மதகு மூலம் பிரதான கால்வாயில் வினாடிக்கு 6.17 கன அடி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

மயிலம் தொகுதி எம்எல்ஏ கே.பி.நாகராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து அணையின் தலைமை மதகை திறந்து வைத்து மலர் தூவினார்.

திண்டிவனம் கோட்டாட்சியர் ஜெயசந்திரன் முன்னிலை வகித்தார். வீடுர் ஊராட்சிமன்ற துணைத் தலைவர் மணிகண்டன், செயற்பொறியாளர் ஜெயராமன், உதவி செயற்பொறியாளர் விஜயகுமார் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**840 சேமிப்பு கிடங்குகள் திறப்பு**

**சென்னை:** தமிழகம் முழுவதும், 95 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, 840 சேமிப்பு கிடங்கு உட்பட, பல்வேறு கட்டடங்களை, முதல்வர் ஜெயலலிதா, நேற்று, "வீடியோ கான்பரன்ஸ்' மூலம், திறந்து வைத்தார். புதிய திட்டங்களையும், துவக்கி வைத்தார்.

அவற்றின் விவரம்: சென்னையில், 4.56 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட, நுகர்வோர் குறை தீர்மன்றம் ஆகியவற்றுக்கான கட்டடம்.சென்னை, சைதாப்பேட்டையில், 53 லட்சம் ரூபாயில் கட்டப்பட்ட, மண்டல உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, உதவி ஆணையர் அலுவலக கட்டடம். 15 மாவட்டங்களில், 27.40 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, 48 நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கு.

தமிழகம் முழுவதும், 95.14 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, 840 சேமிப்பு கிடங்கு. 4.37 கோடி ரூபாயில், நவீன மயமாக்கப்பட்ட, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின், 15 புதிய கிளைகள். கோவை மாவட்டத்தில், 1 கோடி ரூபாயில், 10 இடங்களில் அமைக்கப்பட்ட, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்.

தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகங்கள்.நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு, இரண்டு குளிர்சாதன வசதி உள்ள வாகனங்கள். மாவட்டங்களில்

இருந்து காய்கறிகளை, சென்னைக்கு நகர்வு செய்ய, குளிர்சாதன வசதியுடன் கூடிய வாகனங்கள்.

சென்னையில், இரண்டு நகரும் ரேஷன் கடைகள். கூட்டுறவு வங்கிகளின், 783 கிளைகளில், 8.80 கோடி ரூபாயில் உருவாக்கப்பட்ட, மைய வங்கியியல் கம்ப்யூட்டர் சேவை வசதி. கூட்டுறவு வங்கிகளின், 949 கிளைகளில் அமைக்கப்பட்டுள்ள, கண்காணிப்பு கேமரா.

## மேட்டூர் அணையில் 2,000 கனஅடி நீர் திறப்பு

**மேட்டூர்:** மேட்டூர் அணை டெல்டா குடிநீருக்கான நீர் திறப்பு, நேற்று வினாடிக்கு, 2,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. சம்பா சாகுபடி நிறைவடைந்ததால், கடந்த, 28ம் தேதி, மேட்டூர் அணை டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டது. பின், குடிநீருக்காக, அணையில் இருந்து, பிப்., 2 முதல், வினாடிக்கு, 500 கனஅடி நீர், 10ம் தேதி முதல், 600 கனஅடி நீர் திறக்கப்பட்டது. கோடைக்காலம் துவங்கியதால், டெல்டா மாவட்டங்களில் குடிநீர் தேவை அதிகரித்தது. இதனால், மேட்டூர் அணை குடிநீருக்கான நீர் திறப்பு, 22ம் தேதி, வினாடிக்கு, 1,500 கன அடியாகவும், நேற்று, 2,000 கன அடியாகவும் அதிகரிக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 50 அடியாகவும், நீர் இருப்பு, 18 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 502 கனஅடி நீர் வந்தது.

## முன்பணம் செலுத்துவோருக்கே முட்டை : "நிக்' ஆலோசனை கூட்டத்தில் முடிவு



**பெருந்துறை**: முன்பணம் செலுத்துவோருக்கே முட்டை வினியோகம் செய்ய வேண்டும்' என, தேசிய மண்டல முட்டை ஒருங்கிணைப்பு குழு ஆலோசனைக்

கூட்டத்தில் (நிக்), முடிவு செய்யப்பட்டது.
ஈரோடு மாவட்டம், பெருந்துறையில், நடந்த இக்கூட்டத்தில், தலைமை வகித்த சேர்மன், செல்வராஜ் பேசியதாவது: இனி வரும், ஐந்து மாதங்களில், முட்டை உற்பத்தி குறையும்; தேவைக்கு ஏற்ப, உற்பத்தி இருக்காது. பிற மாநிலங்களின் முட்டையை விட, தமிழகத்தில் உற்பத்தியாகும் முட்டை, நல்ல தரத்துடன் உள்ளதால், சந்தையில், தமிழக முட்டைகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது. வரும் கோடையில், முன்பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே, கோழிப் பண்ணைக்காரர்கள், முட்டை சப்ளை செய்ய வேண்டும். இன்றும், சில பண்ணைக்காரர்களிடம், முன்பணம் செலுத்தி, வியாபாரிகள் முட்டையை எடுத்து வருகின்றனர். இதை, நாமும் பழக்கத்துக்கு கொண்டு வர வேண்டும். அதனால், முட்டை உற்பத்தி அதிகமாக இருக்கும் காலத்திலும், பணம் கொடுத்து, வியாபாரிகள் முட்டை வாங்கும் பழக்கத்துக்கு வந்து விடுவர். இதை ஒற்றுமையாக இருந்து, செய்ய வேண்டும். புதிதாக பண்ணை அமைப்பவர்கள், ஒரு கோழிக்கு, "ஷெட்' அமைக்க குறைந்தது, 600 ரூபாய் வரை செலவு செய்ய வேண்டும். தொழிலாளர்கள் தட்டுப்பாடு மற்றும் தண்ணீர் பிரச்னை காரணமாக. புதிய பண்ணைகள் வருவதற்கு, இன்று வாய்ப்புகள் மிக மிக குறைவு.
நிக் விலைக்கு, பண்ணைக்காரர்கள் முட்டை விற்பனை செய்வதால், பண்ணைக்காரர்களுக்கு நல்ல விலை கிடைப்பதுடன், நுகர்வோர்களுக்கு குறைந்த விலைக்கு, முட்டை கிடைக்கிறது. முட்டை சாப்பிடுபவர்கள் எண்ணிக்கையும், கணிசமாக அதிகரித்துள்ளது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால், நஷ்டத்தில் இருந்து தப்பிக்க முடியும்.இவ்வாறு, அவர் கூறினார்.

### ஆத்தூரில் பருத்தி ஏலம் ரூ.5 கோடிக்கு விற்பனை

**ஆத்தூர்**: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ஐந்து கோடி ரூபாய்க்கு, பருத்தி ஏலம் நடந்தது.
ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் தானியங்கள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, சேலம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி பகுதி மட்டுமின்றி, பெரம்பலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் இருந்து, 1,600 விவசாயிகள், 24 ஆயிரத்து, 226 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

அதில், சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர் பகுதியை சேர்ந்த, 29 வியாபாரிகள் கலந்து கொண்டு, தரத்துக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்தனர். அதன்படி, டி.சி.ஹெச்., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 7,569 ரூபாய், குறைந்தபட்சம், 6,219 ரூபாய், பி.டி., ரகம் அதிகபட்சம், 5,469 ரூபாய், குறைந்தபட்சம், 4,589 ரூபாய் என, மொத்தம் ஐந்து கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

## வேளாண் அறிவியல் நிலையத்திற்கு தனியார் பள்ளி சிறுவர்கள் சுற்றுலா

**விருத்தாசலம்** : விருத்தாசலம் தனியார் பள்ளி சிறுவர்கள் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு சூழலியல் அறிவு மேம்பாட்டு சுற்றுலா சென்றனர்.
விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் மற்றும் வேளாண் மாணவர்களுக்கு வேளாண் பயிர்களின் புதிய ரகங்கள், தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழக அரசு ஆரம்ப பள்ளி முதல் உயர் கல்வி வரை சுற்றுச்சூழல், வேளாண்மை உள்ளிட்ட நடைமுறைப் பாடங்களை சேர்த்துள்ளன.தனியார் பள்ளிகள் புரஜெக்டர்கள் மூலம் மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்புகள் நடத்தி வருகின்றன. இந்நிலையில், வேளாண் அறிவியல் நிலையத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வேளாண் முறைகள் குறித்து அறிவு மேம்பாட்டு சுற்றுலாவாக, விருத்தாசலம் தனியார் பள்ளி மாணவர்கள் 180 பேர் சென்றனர். நிலைய தலைவர் அருணாச்சலம் வழிகாட்டுதல்படி வண்ண மீன்கள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆட்டுப் பண்ணையம், காளான் வளர்ப்பு, பசுமை நாற்றாங்கால், மாடிவீட்டுத் தோட்டம் ஆகியவற்றை சுற்றிப் பார்த்தனர். மாணவர்களை ஆசிரியர்கள் தேவி, க்ளோரியா, ராஜலட்சுமி, விஜயலட்சுமி, ஏஞ்சலன், ராதா உள்பட 20 பேர் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

## கடும் வீழ்ச்சியில் காய்கறி விலை

**ஈரோடு**: காய்கறி விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.
கடந்த சில மாதங்களாக, காய்கறி விலை குறைந்து காணப்படுகிறது. பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், தக்காளி போன்ற, அத்தியாவசிய காய்கறிகள் விலை, 100 ரூபாயை கடந்து, உச்சத்தில் இருந்த நிலை மாறி, தற்போது தலைகீழாக மாறி உள்ளது. தக்காளி விலை, கிலோ, நான்கு ரூபாய்க்கும், வெங்காயம் கிலோ, 14 ரூபாய்க்கும் நேற்று விற்கப்பட்டது.

ஈரோடு உழவர் சந்தையில், காய்கறி விலை வெகுவாக குறைந்து காணப்பட்டன. இந்த விலை குறைப்பு, பெண்கள் மற்றும் வாடிக்கையாளர் மத்தியில் மகிழ்ச்சியை உருவாக்கி உள்ளது.

காய்கறிகளின் விலை(கிலோ): தக்காளி, 4 ரூபாய், பெரிய வெங்காயம், 14, உருளைகிழங்கு, 24, பீன்ஸ், 10, கேரட், 10, பீட்ரூட், 10, பாவைக்காய், 20, புடலங்காய், 10, சுரைக்காய், 5, கத்தரிக்காய், 15, வெண்டை, 13, பச்சை மிளகாய், 5, சாம்பல் பூசணி, 12, மேரகாய், 10, கீரை வகைகள் கொத்தமல்லி, 10 (ஒரு கட்டு), கருவேப்பிலை, 20, பழங்களில் செவ்வாழை சிறியது, 5, செவ்வாழை பெரியது, 7, கருப்பு திராட்சை, 50, வெள்ளை திராட்சை, 40, ஆரஞ்சு, 50, ஆப்பிள், 110 ரூபாய்க்கும் விற்கப்பட்டன.

தேங்காய் விலை, 12 ரூபாயாகவும், வெள்ளரி, 24 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. கடந்த மாதத்தை ஒப்பிடும்போது, காய்கறி விலை குறைந்துள்ளது.

### விவசாயிக்கு மானிய விலையில் வைக்கோல் விற்பனை துவக்கம்

**கரூர்**: விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்யும் திட்டம் துவக்கப்பட்டது.கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி அருகில் முடிகணம் பஞ்சாயத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், தரம் உயர்த்தப்பட்ட புதிய மருந்தகம், உலர் தீவன கிடங்குகள் துவக்க விழா நடந்தது. இதில், கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். கரூர் எம்.பி., தம்பிதுரை முன்னிலை வகித்தார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்து பேசியதாவது: கரூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக தோகைமலை, தரகம்பட்டி, அரவக்குறிச்சி பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் மூலம், உலர்தீவன கிடங்குகள் (வைக்கோல்) விற்பனை துவங்கப்பட்டுள்ளன.

இதற்காக, 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு பெற்று ஒவ்வொரு மருந்தகத்திலும் தலா, 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெரிய விவசாயிகள், வியாபாரிகளிடம் இருந்து போட்டி விலைப்பட்டியல் மூலமாக வைக்கோல் பெறப்பட்டு, கிலோ, 2 ரூபாய் வீதம் மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு நாளைக்கு, மூன்று கிலோ வீதம் அதிகபட்சமாக, 5 மாடுகளுக்கு, 15 கிலோ வீதம் ஒரு வாரத்திற்கு,105 கிலோ வைக்கோல் வழங்கப்படும்.

மாடு வளர்க்கும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் அலுவலர்களின் ஆலோசனைப்படி பதிவுசெய்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

இத்திட்டம் வறட்சிக்காலமாக கருத்தில் கொண்டு, மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, கால்நடை வைத்திருக்கும் விவசாயிகள் இதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை (வைக்கோல்) பெற்று பால் உற்பத்தியை அதிகரிப்பதுடன், கால்நடைகளையும் நல்ல முறையில் பராமரிக்க முடியும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இதைத்தொடர்ந்து கோடந்தூர், ஓந்தாம்பட்டி, இரும்பூதிப்பட்டியில் உள்ள கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்ட மருந்தகங்களாக்கப்பட்டதை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்., தலைவர் கீதா, டி.ஆர்.ஓ., அருணா, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோபிநாத், துணை இயக்குனர் பழனிவேல், உதவி இயக்குனர் குழந்தைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

### மார்ச் 1ம் தேதி முதல் கோமாரி தடுப்பூசி

**காஞ்சிபுரம்** : காஞ்சிபுரம் மாவட்டத்தில், மார்ச் 1 முதல் 21ம் தேதி வரை, கோமாரி தடுப்பூசி போட, அனைத்து ஊராட்சிகளிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், ஆறாவது கட்டமாக கோமாரி தடுப்பூசி, மார்ச் 1ம் தேதியில் இருந்து 21ம் தேதி வரையில், அந்தந்த கால்நடை உதவி கால்நடை மருத்துவமனைகள் மூலம் போடப்பட உள்ளது.

இதற்காக, நேற்று முன்தினம் அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கோமாரி தடுப்பு நடவடிக்கை குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### ஒரு கிலோ விதை நெல்லுக்கு ரூ.5 மானியம்

**காஞ்சிபுரம்** : மானிய விலையில் விதை நெல்லை வாங்க விரும்பும் விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம் என, வேளாண் இணை இயக்குனர் தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த தானியப்பெருக்கு திட்டத்தின் கீழ், 100 டன் விதை நெல் இருப்பு உள்ளது. ஒரு கிலோ விதை, 24 ரூபாய். இதில், விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு, 5 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. மானிய தொகை போக, 19 ரூபாய்க்கு, ஒரு கிலோ விதையை பெற்றுக் கொள்ளலாம். இவ்விதையை வாங்கி பயன் பெற விரும்பும்

விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் உள்ள உதவி இயக்குனர்களை அணுகி பயன் பெறலாம் என்று, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பழனிவேலு தெரிவித்தார்.

### கன மழையால் விவசாயிகள் கவலை

**திண்டிவனம் :** திண்டிவனம் பகுதியில் கனமழை பெய்ததால் தற்பூசணி பயிர் அழுகும் நிலையில் உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.திண்டிவனம் அடுத்த முருக்கேரி, நகர், சிறுவாடி, வடநெற்குணம், நல்லம்பாக்கம், ஆலங்குப்பம் உள்பட 24க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவில் தற்பூசணி பயிர் செய்துள்ளனர். தற்போது அறுவடை நடந்து வருகிறது.

தர்பூசணிக்கு பிற மாநிலங்களில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளின் நிலத்திற்கே வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கின்றனர். நேற்று திடீரென திண்டிவனம் பகுதியில் பெய்த கன மழையால் தர்பூசணி பழங்கள் நிலத்தில் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

### 28ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்

**விழுப்புரம் :** விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் வரும் 28ம் தேதி காலை நடக்கிறது. கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு:

விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வரும் 28ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்குகிறார். மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு மனுவாக அளித்து பயனடையலாம்.

### திருப்புத்தூரில் திடீர் மழை

**திருப்புத்தூர்:** திருப்புத்தூரில் நேற்று மழை பெய்ததால் ஓரளவு வெப்பம் தணிந்தது. திருப்புத்தூர் பகுதியில், கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்து விட்டதால், திருப்புத்தூர் நகரிலுள்ள குளம்,அருகிலுள்ள கண்மாய்கள் வறண்டு காணப்படுகின்றன. பிப்ரவரி துவக்கமே, "அக்னி நட்சத்திரம்' போன்று, வெப்பக்

காற்று வீசத் துவங்கியது.வழக்கத்திற்கு மாறாக, கடும் வெயில் அடிப்பதால், "மழை பெய்யும்' என்று விவசாயிகள் சிலர் நம்பிக்கை தெரிவித்தனர். நேற்று காலை 9 மணி முதல், மழை பெய்யத் துவங்கியது. அவ்வப்போது,மாலை வரை தூறல் காணப்பட்டது. பெரிய அளவு மழை இல்லாவிட்டாலும், மேகமூட்டம், மழைத் தூறலும், கடந்த சில நாட்களாக , நிலவிய வெப்பத்தைக் குறைத்தது.

### முட்டை விலை 325 காசாக உயர்வு

**நாமக்கல்:** தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 320 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 355, பெங்களூரு, 340, மைசூரு, 347, ஹைதராபாத், 312, மும்பை, 348, விஜயவாடா, 314, கோல்கத்தா, 370, பர்வாலா, 330, டில்லி, 340.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

### விருதுநகரில் சாரல் மழை

**விருதுநகர்**: விருதுநகரில் கடந்த சில வாரங்களாக, வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால், பொதுமக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில், நேற்றுகாலை, சாரல் மழை பெய்தது. மதியம் முதல் இரவு வரை, அவ்வப்போது மழை பெய்தது. இதன் காரணமாக, வெப்பம் ஓரளவு குறைந்து, பூமி குளிர்ந்தது. ஆனால், தண்ணீரின்றி கருகிவரும் பயிர்களை காப்பாற்ற, தொடர் மழை பெய்ய வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்த்து காத்துக் கொண்டுள்ளனர்.

## புதுக்கோட்டையில் சாரல் மழை

**புதுக்கோட்டை:** புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவிவருகிறது. விவசாய விளை நிலங்கள் தரிசு நிலங்களாக மாறிவிட்டது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டதால் குடிநீர் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

மழை பெய்யவேண்டி கோவில்களில் சிறப்பு யாகம் மற்றும் பூஜைகள் நடைபெற்று வருகிறது.இதற்கிடையே கடந்த ஒரு மாதமாக நிலவிவரும் கடும் பனி பொழிவுக்கு இடையே பகல் நேரத்தில் வெயிலின் தாக்கமும் சூடிபிடித்துள்ளது. கோடையை மிஞ்சும் விதத்தில் வெயில் வாட்டி வதைக்கிறது.

நேற்று காலை 9 மணிவரை வழக்கம்போல் வெயில் வெளுத்து வாங்கியது. 9.30 மணிக்கு மேல் கார்மேகம் சூழ்ந்து சாரல் மழை பெய்யத் துவங்கியது. 11 மணிவரை இடைவிடாது பெய்த சாரல் மழையினால் வெயிலின் தாக்கம் ஓரளவு தணிந்தது. நீண்ட நாட்கள் இடைவெளிக்கு பின் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளில் மழை பெய்ததால் அ.தி.மு.க.,வினர் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தனர். முதல்வர் பெயரில் கோவில்களில் நடத்தப்பட்ட விசேஷ பூஜைகளுக்கு கைமேல் பலன் கிடைத்துவிட்டதாக அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

## கொடைக்கானலில்மழை

**கொடைக்கானல்:**கொடைக்கானலில் நேற்று பகல் 12:00 மணிக்கு சிறிது நேரம் மழை பெய்தது. மீண்டும் மாலை 5:30 க்கு, துவங்கிய மழை, இரவு முழுவதும் பெய்தது. இதனால், மாலை 6:00 முதல் இரவு 8:00 மணி வரையும், இரவு 8:10 முதல் 8:40 மணி வரையும் மின்தடை ஏற்பட்டது. நகர மக்கள் அவதி அடைந்தனர்.

## மானியத்தில் வைக்கோல் விற்பனை மையங்களில் வியாபாரிகள் நியமிப்பு

**திண்டுக்கல்:** விவசாயிகளுக்கு மானியத்தில் தீவன விற்பனை செய்வதற்காக, மாவட்டத்தில் உள்ள அனைத்து வைக்கோல் விற்பனை மையங்களுக்கும் புதிய வியாபாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்வதற்காக அனைத்து மாவட்டங்களிலும் மையங்கள் திறக்கப்பட்டன. கிலோவிற்கு ரூ. 2 என விவசாயிகளுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒரு மாட்டிற்கு மூன்று கிலோ வீதம் ஒரு விவசாயி அதிகபட்சமாக ஐந்து மாடுகளுக்கு மானிய விலை வைக்கோல்

பெற்றுக்கொள்ளலாம்.ஒரு வாரத்திற்கு தேவையான 105 கிலோ வைக்கோலை, முன் பதிவு செய்துள்ள விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக மாவட்டத்தில் ஐந்து மையங்கள் திறக்கப்பட்டிருந்தன. வினியோகிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த வியாபாரி, விலை கட்டுப்படியாகவில்லை என்ற காரணத்தை கூறி தலைமறைவாகி விட்டார். இதனால் திறக்கப்பட்டிருந்த மையங்கள் வைக்கோல் இல்லாமல் வெறிச்சோடி கிடந்தது. வைக்கோல் விலையை அதிகரித்து தருவதாக கூறிய மாவட்ட நிர்வாகம் மீண்டும் டெண்டருக்கான அறிவிப்பை வெளியிட்டது. கடந்த முறை கிலோவிற்கு ரூ. 6 நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது கூடுதலாக ரூ. 7 தருவதாக முடிவு செய்யப்பட்டு அனைத்து மையங்களுக்கும் தனித்தனி வியாபாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.கால்நடைத்துறையினர் கூறுகையில்,"மானிய வைக்கோல் மையங்கள் நேற்று முதல் மீண்டும் செயல்பட துவங்கியுள்ளன. விவசாயிகள் தேவையான வைக்கோலை பெற்றுக்கொள்ளலாம்,' என்றனர்.

## மீன் வரத்து குறைவு விலை அதிகரிப்பு

**திண்டுக்கல்:** வரத்தில்லாததால், சந்தைகளில் சாதாரணமாக கிடைக்கும் மீன் ரகங்களின் விலை கிலோவிற்கு ரூ. 50 லிருந்து அதிகபட்சமாக ரூ. 120 வரை அதிகரித்துள்ளது. சந்தைகளில் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்த மீன் வகைகள் தற்போது எல்லா தெருக்களிலும் பிளாட்பார கடைகள் அமைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இது தவிர தலைச்சுமையாக விற்பவர்களும் அதிக அளவில் உள்ளனர்.மாவட்டத்திற்கு தேவையான மீன் ரகங்கள், ராமேஸ்வரம் மற்றும் தூத்துக்குடியிலிருந்து லாரிகளில் கொண்டு வரப்படுகின்றன. கடற்கரைகளில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் காரணமாக மீன் வரத்து சமீப காலமாக குறைந்துள்ளது.இதனால் அனைத்து ரக மீன்களின் விலை கிலோவிற்கு ரூ. 50 லிருந்து 120 வரை அதிகரித்துள்ளது. எல்லா காலங்களிலும் கிடைக்கக்கூடிய சாதாரண வகை மீன்களான முரள், மஞ்சக்கிளி, மட்டி போன்றவற்றின் விலை ரூ. 50 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேப்போன்று இறால், நெய்மீன், விளமீன், நவரை போன்றவற்றின் விலை ரூ. 120 வரை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் தேவைக்கேற்ப மீன்களை வாங்க முடியாமல் நுகர்வோர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## குறைந்த சாத்தனூர் அணை நீர்மட்டம்

**திருவண்ணாமலை:** சாத்தனூர் அணையில் இருந்து ஏரிகளுக்கு, தண்ணீர் திறப்பதால், அணையின் நீர்மட்டம், 80அடியாக குறைந்துள்ளது.

திருவண்ணாமலை அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணையில் நீர்மட்டம் முழு கொள்ளளவு, 119 அடியாகும், இந்த அணையை நம்பி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த, 50ஆயிரம் ஏக்கர் பாசனம் நடைபெறுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழையின்றி, சாத்தனூர் அணை முழுமையாக நிரம்பவில்லை, அணையின் மொத்த உயரமான, 119 அடியில், 89.05 அடி மட்டுமே இந்த ஆண்டு எட்டியது.

எனவே, நேரடி பாசனத்துக்கு, தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது, இதனால், திருவண்ணாமலை மாவட்டத்தில், 34 ஏரிகள், விழுப்புரம் மாவட்டத்தில், 44 ஏரிகள் உள்பட மொத்தம், 78 ஏரிகளுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்படுகிறது. அதன்படி, அணையின் வலது புற கால்வாய் வழியாக வினாடிக்கு, 180 கன அடியும், இடது புற கால்வாய் வழியாக, வினாடிக்கு, 240 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த, 6ம் தேதி முதல் தொடர்ந்து, ஏரிகளுக்கு தண்ணீர் திறக்கப்படுவதால், தற்போது அணையின் நீர்மட்டம், 80 அடியாகவும், நீர் கொள்ளளவு, 1,575 மில்லியன் கன அடியாகவும், குறைந்திருக்கிறது, கடந்த, 18 நாட்களில், ஒன்பது அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், மார்ச், 1ம் தேதி காலை, 9 மணியுடன், சாத்தனூர் அணையில் இருந்து, ஏரிகளுக்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்படும். அணையில் மீதமுள்ள தண்ணீரை, கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மற்றும் அணை பராமரிப்பு பணிகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படும்.

## தஞ்சையில் திடீர் மழை மக்கள் மகிழ்ச்சி

**தஞ்சாவூர்:** தஞ்சையில், கோடை வெய்யில் வெளுத்துக்கட்டிய நிலையில் நேற்று திடீர் மழை பெய்ததால் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது. இதனால், நகர மக்கள் குதூகலம் அடைந்தனர்.

தஞ்சை, நாகை, திருவாரூர் உள்பட டெல்டா மாவட்டங்கள், விவசாய பாசனத்துக்கு முழுமையாக காவிரி நீரையே நம்பி உள்ளன. இங்கு, மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு காலங்களில் மட்டுமே விவசாயமும், பசுமையும்

செழிக்கும்.மற்ற காலங்களில் பருவமழையும் பொய்த்து விட்டால், ஆறு, கால்வாய்களில் வறட்சியே நிலவும். இந்நிலையில், கடந்த சில தினங்களாக கோடை வெய்யில் வெளுத்துக்கட்டியது. இதனால், மக்கள் பரிதவித்து வந்தனர். நேற்றுக்காலை முதல் வெய்யில் தலைகாட்டாமல், வானம் மேகமூட்டமாக காட்சியளித்தது. தொடர்ந்து, 11.30 மணியளவில் லேசாக தூறல் மழை துவங்கியது. பின்னர், படிப்படியாக மதியத்துக்கும் மேல் மழை வலுத்து பெய்தது. இதனால், வழக்கத்துக்கு மாறாக குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை தஞ்சையில் நிலவியது. இதனால், நகர மக்கள், வெளியூர் பயணிகள் குதூலகம் அடைந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காவிரி டெல்டாவில் மழை**



**திருச்சி:** காவிரி டெல்டாவில், பருவமழை பொய்த்த நிலையில், கோடை காலம் தொடங்குவதற்கு முன்னே கடந்த சில வாரங்களாக பகலில் அனலின் தாக்கம் அதிகம் இருந்தது. இரவில் குளிர்ந்த காற்றும், பகலில்  கடும் வெயிலும் சுட்டெரித்தது. இதனால் நீர்நிலைகள் வறண்டு போனதோடு செடி, கொடிகள் காய்ந்தன. இந்நிலையில் நேற்று அதிகாலை திருச்சி மாவட்டத்தில் லேசான சாரலுடன் பெய்த மழை கொஞ்சம் நேரம் நீடித்தது. இதில் ஒரு சில இடங்களில்

கனமழை பெய்தது. இந்த மழையும் கொஞ்சம் நேரம் நீடித்ததால் வெயில் சற்று குறைந்தது. பின்னர் காலை 11 மணியளவில் திடீரென லேசான மழை பெய்தது. சிறிது நேரம் இந்த மழை நின்றது. பிற்பகல் 2 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் 2 மணி நேரம் மழை நீடித்தது.

நாகை மாவட்டத்தில் நாகை, திருமருகல், திட்டச்சேரி, கீழ்வேளூர் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை 7.30 மணி முதல் சுமார் 20 நிமிடங்கள் வரை லேசான மழை பெய்தது. திருவாரூரில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் லேசான மழை பெய்தது. அதேபோல் நேற்று காலை திருவாரூரில் லேசான மழையும், திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் காலை முதல் மதியம் 2 மணி வரை பலத்த மழையும் பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று அதிகாலை 6 மணி அளவில் லேசாக மழை பெய்தது. சுமார் 30 நிமிடம் வரை மழை நீடித்தது. மீண்டும் 11 மணி அளவில் லேசாக பெய்யத்தொடங்கிய மழை மாலை வரை நீடித்தது. இதனால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கும்பகோணம் பகுதியில் நேற்று காலையில் பனி பெய்வது போல் சாரல் மழை பெய்தது. பின்னர் 10 மணிக்கு மேல் பரவலான மழை பெய¢தது. இந்த மழையின் காரணமாக சம்பா அறுவடையும், வைக்கோல் காய வைக்கும் பணியும் முடங்கியது.

**57 விவசாய பொருட்களுக்கு 10 ஆண்டுகளில் புவிசார் குறியீடு**



**புதுடெல்லி:** கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 57 விவசாய பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. புவிசார் குறியீடு சட்டம் 1999ம் ஆண்டு இயற்றப்பட்டது.இதன் விதிகள் 2003ம் ஆண்டு செப்டம்பர் முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒரு இடத்தை சார்ந்து உற்பத்தி செய்யும் சிறப்பு பொருட்களுக்கு மற்றவர்கள் உரிமை கொள்ளக்கூடாது. இந்த சட்டத்தின் கீழ் 195 பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மதுரை மல்லி, டார்ஜிலிங் டீ உள்ளிட்ட 57 விவசாய பொருட்களுக்கு புவிசார் குறியீடு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**குன்னூர் ஏல மையத்தில் 75 %தேயிலை தூள் விற்பனை**



**குன்னூர் :** குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 8வது ஏலம் கடந்த வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 12.93 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.அதில் இலை ரகம் 8.96 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.97 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர்.இதனால் 75 சதவீத தேயிலை தூள் மட்டுமே விற்பனையானது. ஆனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலை சரிந்தது. இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.57 முதல் ரூ.60 வரையிலும், உயர்வகை

ரூ.110 முதல் ரூ.180 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.67 முதல் ரூ.72 வரையிலும், உயர் வகை ரூ.130 முதல் ¢ரூ.190 வரை விலை கிடைத்தது.

**முட்டை விலை 325 காசாக நிர்ணயம்**



**நாமக்கல் :** நாமக்கல் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில், பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு விலை நிலவரம் பற்றி ஆலோசித்தனர். கூட்டத்தில் முட்டை விலையில் 5 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் விலை 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழகத்தில் முட்டை விற்பனை சற்று அதிகரித்து இருப்பதால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர் அதே போல, ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.54, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.68 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) வருமாறு:சென்னை-355, பெங்களூரு-340, மைசூர்-347, ஐதராபாத்-312,மும்பை-348, விஜயவாடா-314, கொல்கத்தா-370 டெல்லி-340.

**வரத்து குறைந்ததால் தமிழ்நாடு, கேரளாவில் தேங்காய் எண்ணெய் விலை உயர்வு**



வரத்து குறைந்ததால் கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற இடங்களில் தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்து காணப்படுகின்றது. காங்கேயம் மொத்த விற்பனை சந்தையில் 1 கிலோ தேங்காய் எண்ணெய் ரூ.130க்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.12,000 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. இதே போன்று கேரளாவின் கொச்சி விற்பனை சந்தையில் குவிண்டால் தேங்காய் எண்ணெய் ரூ.11,000 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. இது கடந்த 2013ம் ஆண்டில் இருந்ததைவிட அதிகபட்சமாகும். கடந்த 1 மாதத்தில் மட்டும் தேங்காய் எண்ணெய் விலை 15% அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் மாதம் முதல் தமிழகம் மற்றும் கேரளாவில் தேங்காய் விளைச்சல் இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும் அப்போது விலை உயர்வு சீரடையும் என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கிருஷ்ணராயபுரத்தில் லேசான சாரல் மழை**

**கிருஷ்ணராயபுரம், :** கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் நேற்று வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக கடும் பனி பொழிவு காணப்பட்டது. 10 மணிக்கு மேல் கடுமையான வெயிலும் நிலவியது. கடந்த 2 நாட்களாக பனிப்பொழிவு குறைந்து, வெயில் அதிகமாக காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று பனி குறைந்து காலை முதல் மாலை வரை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. கிருஷ்ணராயபுரம் பகுதிகளான மாயனூர்,

சித்தலவாய், திருக்காம்புலியூர், பழையஜெயங்கொண்டம், லாலாப்பேட்டை, மணவாசி ஆகிய பகுதிகளில் லேசான சாரல் மழை பெய்தது.
இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்று நீர்வரத்து நிறுத்தப்பட்டதால் வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி பெறும் வாழை, வெற்றிலை, இலை ஆகிய பயிர்கள் வாடி வருகிறது. தற்பொழுது பொய்யும் இந்த மழை சற்று கனமாக பெய்தால் பயிர்களை காப்பாற்றலாம் என்றனர்.

## பூம்புகாரில் இலவச மீன் வளர்ப்பு பயிற்சி நிறைவு

**பூம்புகார், :** நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒருவாரம் நடைபெற்ற இலவச மீன்வளர்ப்பு பயிற்சி நிறைவு பெற்றது. பூம்புகார் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மயிலாடுதுறை இண்டியன் ஒவர்ஸீஸ் வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி, கடந்த 15ம்தேதி துவங்கி ஒரு வாரம் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடந்த பயிற்சியின் நிறைவு விழாவுக்கு, காவிரிப்பூம்பட்டினம் இந்தியன் ஒவர்ஸீஸ் வங்கி மேலாளர் கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் முன்னிலை வகித்தார். பூம்புகார் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வராசு வரவேற்றார். விழாவில் பயிற்சி பெற்ற 30 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இதில் பூம்புகார், மேலையூர், நெய்தவாசல், புதுக்குப்பம், நாயக்கர்குப்பம், கீழப்பெரும்பள்ளம், மேலப்பெரும்பள்ளம் மற்றும் பல பகுதி களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆராய்ச்சியாளர் கணபதிராமன் நன்றி கூறினார்.

## இரண்டாம் போக நெல் அறுவடை பணிகள் துவக்கம்

**கூடலூர், :** கம்பம் மஞ்சக்குளம் பகுதியில் இரண்டாம் போக அறுவடைப்பணிகள் தொடங்கி உள்ளன. தண்ணீரின்றி இரண்டாம் போக நெல் விளைச்சல் பாதியாக குறைந்ததால் விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர்.
தேனி மாவட்டத்தில் முல்லைப்பெரியாற்று தண்ணீர் மூலம் 14,707 ஏக்கர்

நிலப்பரப்பில் இருபோக நெல்விவசாயம் நடந்து வருகிறது. கம்பம் மஞ்சக்குளம் பகுதியில் இரண்டாம் போக நெல் விவசாயம் செய்யப்பட்டு சுமார் 3 மாதங்களுக்கு மேல் ஆகி உள்ளது. இந்நிலையில் நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்கள் உருவாகி பால் பிடித்து நெல் மணிகளாக மாறி வந்தன. அப்போது கடந்த மாதம் முதல், பெரியாறு அணையின் நீர் மட்டம் குறைந்ததால், அணையிலிருந்து விவசாயத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டது. அறுவடைக்கு ஒருசில வாரங்களே இருந்த நிலையில் திடீரென தண்ணீர் நிறுத்தப்பட்டதால் நெல் விவசாயம் பாதித்தது. இதனால் கம்பம் சின்னவாய்க்கால் தண்ணீரை நம்பி உள்ள மஞ்சள்குளம் பகுதியில் கருகிய நெற்பயிர்களுக்கு, விவசாயிகள் டேங்கர் லாரிகளில் தண்ணீர் பிடித்து கொண்டு வந்து தெளித்தனர். முறையாக தண்ணீர் கிடைக்காததால் நெற்பயிர்கள் விளைச்சல் பாதியாக குறைந்தது. இந்நிலையில் நேற்று முதல் இப்பகுதியில் அறுவடை இயந்திரம் மூலம் இரண்டாம் போக நெல் அறுவடைப்பணி தொடங்கி உள்ளது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், ‘முறையாக தண்ணீர் கொடுக்காததால் இரண்டாம் போக விவசாயம் முழுமையாக பாதித்துள்ளது. ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்துள்ளோம். ஏக்கருக்கு 30 மூடை நெல் அறுவடை செய்யவேண்டிய இடத்தில் 10 முதல் 15 முடை நெல் மட்டுமே கிடைத்துள்ளது. 60கிலோ எடைகொண்ட நெல்மூடை ஒன்றுக்கு ரூ.750 முதல் 800 வரை விலை போகிறது. மொத்தத்தில் இரண்டாம் போகம் விவசாயிகளுக்கு மாபெரும் இழப்புதான்’ என்றனர்.

## 28ல் வேளாண் குறைதீர்க்கும் கூட்டம்

**ஈரோடு, :** ஈரோடு மாவட்ட வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் வரும் 28ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது. அன்றைய தினம் 11 மணி முதல் 11.30 மணி வரை மனுக்கள் கொடுக்கலாம். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி வரை அலுவலர்களின் விளக்கம் தெரிவிக்கப்படவுள்ளது.இந்த கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன் பெற கலெக்டர் சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான ரூ.153 கோடி மதிப்பில் பணிகள் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்**



**சென்னை,**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான ரூ.153 கோடி மதிப்பிலான பணிகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்

**நுகர்வோர் கோர்ட்டு திறப்பு**

இதுகுறித்து தமிழக அரசு பிறப்பித்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சென்னையில் 4 கோடியே 56 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஆகியவற்றிற்கென புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா 24–ந் தேதி (நேற்று) தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்.

மேலும், சென்னை, சைதாப்பேட்டையில் 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்

பாதுகாப்புத் துறையின் உதவி ஆணையர் அலுவலக கட்டிடம்; திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, அரியலூர், தேனி, சிவகங்கை, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், திருவள்ளூர், தருமபுரி, நாமக்கல், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் 27 கோடியே 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 64,200 மெட்ரிக் டன் கொள்ளவுடன் கட்டப்பட்டுள்ள 48 நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள்; என 27 கோடியே 93 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

**கூட்டுறவுத்துறை**

கூட்டுறவே நாட்டுயர்வு எனும் முதுமொழிக்கேற்ப, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. தமிழகத்தில், கூட்டுறவு இயக்கம் பல்வேறு வகையான பணிகளில் பகுதிகளிலும் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

வேளாண் கடன், நகைக் கடன், இடுபொருட்கள் விற்பனை, ஆதார விலையில் வேளாண்மை பொருட்கள் கொள்முதல், பொது விநியோகத் திட்டம் போன்ற இன்றியமையாப் பணிகளைக் கூட்டுறவு அமைப்புகள் செயல்படுத்துகின்றன. இவ்வாறு செயல்படும், கூட்டுறவு நிறுவனங்களை நவீனப்படுத்தி, மாநிலம் முழுவதும் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவையான சேமிப்புக் கிடங்கு வசதிகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

**புதிய வங்கிக் கிளைகள்**

அந்த வகையில், தமிழகம் முழுவதும் 95 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 89 ஆயிரத்து 400 மெட்ரிக் டன் கொள்ளவுடன் கட்டப்பட்டுள்ள 840 சேமிப்புக் கிடங்குகள்; வணிக வங்கிகளுக்கு இணையாக, கூட்டுறவு வங்கிகளின் சேவையை, வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில், 4 கோடியே 37 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்பட்ட, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 15 புதிய கிளைகள்;

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் விளைபொருட்களை உடனுக்குடன் துல்லியமாக எடை போட, ஈரோடு மாவட்டம் பெருந்துறை மற்றும் பவானி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆகிய மூன்று வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 60 மெட்ரிக் டன் கொள்ளளவில் 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கணினி எடைமேடைகள்;

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இடங்களில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்; தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில், 2 கோடியே 33 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள இரண்டு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகங்கள்;

என 103 கோடியே 41 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டிடங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதா 24–ந் தேதியன்று (நேற்று) திறந்து வைத்தார்.

**நகரும் ரேஷன் கடை**

நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு 2 குளிர்சாதன வசதியுள்ள வாகனங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து காய்கறிகளை சென்னைக்கு நகர்வு செய்ய ஜி.பி.எஸ். மற்றும் குளிர் சாதன வசதியுடன் கூடிய வாகனங்கள், என மொத்தம் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 குளிர் சாதன வசதியுள்ள வாகனங்கள்;

சென்னை மாநகரில் 28 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு நகரும் நியாய விலைக் கடைகள்; கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, கூட்டுறவு வங்கிகளின் 783 கிளைகளில் 8 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில், மைய வங்கியியல் கணினி சேவை வசதி;

**ரூ.153 கோடி மதிப்பு**

கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 949

கிளைகளில், 6 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்;

தனியார் சிறப்பங்காடிகளின் தரத்திற்கு இணையாக, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் சிறப்பங்காடிகள் நவீனப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில், கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் தலைமையகத்தில், 34 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், நவீனப்படுத்தப்பட்ட சுயசேவை பிரிவு ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவினால் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் மதிப்பு 153 கோடியே 45 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**பணி நியமன ஆணைகள்**

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 40 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 7 ஜீப்புகளை வழங்கும் அடையாளமாக 2 ஜீப் ஓட்டுநர்களுக்கு சாவிகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியின்போது உயிரிழந்த 21 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பட்டியல் எழுத்தர் மற்றும் எடையாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 3 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கி வாழ்த்தினார்

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நடப்பு நிதி ஆண்டில் அரிசி, கோதுமை ஏற்றுமதி 1.80 கோடி டன்னாக இருக்கும்**



**புதுடெல்லி,**

நடப்பு நிதி ஆண்டில், அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி 1.80 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற நிதி ஆண்டில் ஏற்றுமதி 2.20 கோடி டன்னாக உயர்ந்திருந்தது. மத்திய அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக ஏற்றுமதிக்கு விதித்திருந்த தடையை நீக்கியதை அடுத்து ஏற்றுமதி அதிகரித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டோடு நிறைவடையும் இரண்டு ஆண்டுகளில் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவிற்கு 4 கோடி டன்னாக இருக்கும் என வேளாண்மை செலவினம் மற்றும் விலை ஆணையத்தின் தலைவர் குல்டி தெரிவித்தார்.

சர்வதேச அளவில் அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் பருவமழை நன்றாக இருந்ததால் வரலாறு காணாத அளவிற்கு தானிய உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கையிருப்பு அதிகளவில் உள்ளது மற்றும் உணவு விலை பணவீக்கத்தை குறைக்கும் வகையிலும் கையிருப்பில் உள்ள தானியங்களில் 2 கோடி டன்னை பொது சந்தையில் விற்பனை செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அரிசி ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் இதுவரை முன்னணியில் இருந்த தாய்லாந்தை பின்னுக்கு தள்ளி இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது. அதே சமயம் தாய்லாந்து கையிருப்பை காலி செய்யும் நோக்கில் ஏற்றுமதி செய்வதால் சர்வதேச சந்தையில்

விலை குறைந்துள்ளது. கோதுமை ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. நம்நாட்டில் இருந்து கோதுமை இறக்குமதி செய்வதால் ஏற்படும் செலவினம் குறைவாகவே இருப்பதே இதற்கு காரணமாகும்.

**33 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் சு.ரவி எம்.எல்.ஏ. வழங்கினார்**



**அரக்கோணம்,**

அரக்கோணம் அருகே கும்பினிபேட்டையில் பழங்குடியினர், இருளர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு கும்பினிபேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க துணை தலைவர் பார்த்தசாரதி தலைமை தாங்கினா£. மாவட்ட பொருளாளர் கோ.சி.மணிவண்ணன், நெமிலி ஒன்றிய குழு துணை தலைவர் ஜெ.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் கோதண்டம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக சு.ரவி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, 33 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கியும், 15 பேருக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அடிக்கல் நாட்டியும் பேசினார்.

விழாவில் ஒன்றிய கவுன்சிலர்கள் பாண்டுரங்கன், நவநீதம்அன்பு, நகராட்சி கவுன்சிலர்கள் ஜெர்ரி, பாஸ்கரன், சித்தேரி ஊராட்சி மன்ற தலைவர் சரோஜா ஏழுமலை, தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வு 325 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 320 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 325 காசுகளாக உயர்ந்து உள்ளது.பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

சென்னை–355, ஐதராபாத்–312, விஜயவாடா, தனுகு–314, பார்வாலா–330, மும்பை–348, மைசூர்–347, பெங்களூர்–340, கொல்கத்தா–370, டெல்லி–340.கறிக்கோழி கிலோ ரூ.68–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.54–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 28–ந் தேதி நடக்கிறது**

**ஈரோடு,**

ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வருகிற 28–ந் தேதி (வெள்ளிக்கிழமை) கலெக்டர் வி.கே.சண்முகம் தலைமையில் நடக்கிறது.அன்றையதினம் பகல் 11 மணி முதல் 11.30 மணிவரை விவசாயிகள் தங்கள் கோரிக்கை மனுக்கள்

வழங்கலாம். 11.30 மணி முதல் 12.30 மணிவரை விவசாய சங்க பிரதிநிதிகள் கருத்துகள் தெரிவிக்கலாம். எனவே விவசாயிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த தகவல் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**தஞ்சையில் இருந்து கிருஷ்ணகிரிக்கு சரக்குரெயிலில் 1,113 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

அதன்படி நேற்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன. மொத்தம் 29 வேகன்களில் 27 ஆயிரத்து 825 நெல் மூட்டைகள் அடங்கிய 1,113 டன் நெல்

ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

**விழுப்புரம் மாவட்டத்தில் மழை; விவசாயிகள் மகிழ்ச்சி மரக்காணத்தில் உப்பு உற்பத்தி பாதிப்பு**



**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டத்தில் மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழையினால் மரக்காணத்தில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

**விழுப்புரம்**

விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக பனி மூட்டம் அதிகமாக காணப்பட்டது. மேலும் பகல் நேரங்களில் வெயில் மக்களை வாட்டி வதைத்து வந்தது. இந்நிலையில் நேற்று காலை 6 மணிக்கு வானத்தில் திடீரென கரு மேகங்கள் சூழந்தன. பின்னர் காலை 7 மணி முதல் லேசான சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. தொடர்ந்து பெய்த மழை யானது பகல் 12 மணிக்கு சற்று பலத்த மழையாக பெய்தது. இதனால், சாலைகளில் மழை நீர் வழிந்தோடி சாலையோர பள்ளங்களில் குளம் போல் தேங்கி நின்றது.

**இயல்பு வாழ்க்கை பாதிப்பு**

பள்ளி, கல்லூரி மாணவர்கள் குடை பிடித்தபடி பள்ளி, கல்லூரிகளுக்கு செல்வதை காணமுடிந்தது. மேலும் நடை பாதை வியாபாரிகள் சாமி யானா அமைத்து

தங்களது பொருட்களை விற்பனை செய்தனர். டீக்கடைகளில் பஜ்ஜி, போண்டா, வடை போன்ற பலகார விற்பனை சூடுபிடித்து காணப்பட்டது. மழையின் காரணமாக திருச்சி- சென்னை சாலையில் சென்ற வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி சென்றன. காலையில் இருந்து மாலை 3 மணி வரை தொடர்ந்து பெய்த சாரல் மழையின் காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

**<u>திண்டிவனம்</u>**

திண்டிவனம், செஞ்சி பகுதியில் நேற்று காலையில் திடீரென வானில் மேகக்கூட் டங்கள் கூடி மழை பெய்தது. பகல் முழுவதும் விட்டு, விட்டு பெய்த மழையினால் சாலை களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங் களில் மழைநீர் தேங்கியது. வெயில் சுட்டெரித்த நிலையில் திண்டிவனம், செஞ்சி பகுதி யில் பரவலாக பெய்த மழை யினால் வெப்பம் குறைந்துள் ளன. இந்த மழையினால் மானாவரி பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.

திண்டிவனத்தில் பெய்த மழையினால் நேரு வீதி சாலை சேறும், சகதியுமாக மாறியது. இதனால் வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் கடும் அவதியடைந்தனர். மாலை யில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தபடி சென்றதை காணமுடிந்தது.

**<u>உப்பு உற்பத்தி பாதிப்பு</u>**

மரக்காணத்தில் கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரித் ததால் மத்திய அரசுக்கு சொந்தமாக சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும், மாநில அரசுக்கு சொந்தமாக சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பிலும் உப்பு உற்பத்தி பணி தீவிரமாக நடந்து வந்தது. இந்த நிலையில் நேற்று பகல் முழுவதும் பரவலாக பெய்த மழையினால், உப்பு உற்பத்தி செய்து வரப்புகளில் குவியல், குவியலாக குவித்து வைத்தி ருந்த உப்பு மழைநீரில் கரைந் தது.

மேலும் உப்பளத்தில் மழைநீர் தேங்கியதால், உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதே போல் மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் பலத்த மழையும், மிதமான மழையும் பெய்தது.

**விக்கிரவாண்டி அருகே பாசனத்திற்காக வீடூர் அணையில் தண்ணீர் திறப்பு**



**விக்கிரவாண்டி,**

விக்கிரவாண்டி அருகே வீடூர் அணையில் பாசனத்திற்காக தண்ணீரை நாகராஜன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

**வீடூர் அணையில் தண்ணீர் திறப்பு**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே வீடூர் அணை உள்ளது. இந்த அணைக்கு மழைக்காலங் களில் சங்கராபரணி மற்றும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து மழை நீர் அணைக்கு வந்து சேரும். இந்த அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மூலம் தமிழ்நாட்டில் 2,200 ஏக்கரும், புதுச்சேரி மாநிலத்தில் 1,000 ஏக்கர் விவசாய நிலமும் பாசன வசதி பெறுகின்றது.

இந்த வருடம் பருவ மழை பெய்யாததால் வீடூர் கிராம விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு தண்ணீரின்றி தவித்து வந்தனர். ஆகையால் வீடூர் அணையில் தண்ணீர் திறந்து விட வேண்டும் என தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவிற்கு கோரிக்கை விடுத்தனர். அந்த கோரிக் கையை முதல்- அமைச்சர் ஏற்று வீடூர் அணையில் தண்ணீர் திறந்துவிட உத்தர விட்டார்.

அதன்படி நேற்று வீடூர் அணையில் இருந்து பாச னத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் திண்டிவனம் கோட்டாட்சியர் ஜெயச்சந் திரன் முன்னிலை வகித்தார். மயிலம் சட்டமன்ற உறுப்பினர் நாகராஜன் கலந்து கொண்டு வீடூர் மதகை திறந்து வைத்தார்.

அப்போது அணையில் இருந்து 6.17 கன அடி தண்ணீர் பாசன வாய்க்கால் வழியாக சென்றது. இந்த அணையில் இருந்து அடுத்த மாதம் 10-ந் தேதி வரை 15 நாட்களுக்கு தண்ணீர் விடப்படுகிறது. வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறந்து விடப்பட்ட தண்ணீரால் 493 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கீழ் பெண்ணையாறு வடிகால் கோட்ட செயற்பொறியாளர் ஜெயராம், உதவி செயற் பொறியாளர் அந்தோணிராஜ், உதவி பொறியாளர் விஜய குமார், வீடூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் மணிகண் டன், ஒன்றிய கவுன்சிலர் கங்காதுரை, பாசன சங்க தலைவர் மணவாளன் உள்பட பல விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**மனம் திருந்திய மது குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக ரூ.3¼ லட்சத்தில் கறவை பசுக்கள்**



**அரியலூர்,**

மனம் திருந்திய மதுக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக 11 பயனாளிகளுக்கு ரூ.3 லட் சத்து 30 ஆயிரம் மதிப்பிலான கறவை பசுக்களை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங் கினார்.

<u>மது குற்றவாளிகளின் மறுவாழ்வு</u>

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மதுவிலக்கு மற்றும் ஆய தீர்வைத்துறையின் சார்பில் மனம் திருந்திய மதுக்குற்ற வாளிகளின்

மறுவாழ்விற்காக 11 பயனாளி களுக்கு தலா ரூ.30 ஆயிரம் வீதம் ரூ.3 லடசத்து 30 ஆயிரம் மதிப்பிலான கறவை பசுகளை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கி கூறியதாவது:–

மதுக்குற்ற செயல்களில் ஈடு படுபவர்கள் மீண்டும் அந்த குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்கவும், அவர்களின் பொருளாதார நிலையை மேம் படுத்துவதற்காகவும் தமிழக அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகி றது.

**<u>பொருளாதார முன்னேற்றம்</u>**

தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் அரியலூர் மாவட்டத்தில் மதுக்குற்றச் செயல்களில் ஈடுபட்டு தற்போது மனம் திருந்தி வாழும் 11 பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்காக ஓவ்வொரு பயனாளிக்கும் தலா ரூ.30 ஆயிரம் மதிப்பில் கன்று களு டன் கூடிய கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள் ளது.

இதற்காக கால்நடை பரா மரிப்புத்துறை அலுவலர் கள், கால்நடை மருத்துவர்கள் ஆகி யோர் இணைந்து பயனாளி களை நேரில் அழைத்து சென்று நேரடியாக கறவை பசுக்களின் பால் தரும் அளவு பரிசோதிக்கப்பட்ட பின்னரே அந்தந்த பயனாளி களுக்கு மாடுகள் வழங்கப்பட்டு வரு கிறது.

இந்தப்பசுக்கள் நாளொன் றுக்கு 10 லிட்டர் வீதம் 15 லிட்டர் வரை பால் தரவள் ளது. இப்பசுக்களுக்கு அரசின் சார்பில் ஒரு வருடத்திற்கு காப்பீடும், மேலும், ஒரு மாதத் திற்கு தேவையான வைக்கோல் மற்றும் இலவச மருத்துவ சிகிச்சையும் அளிக்கப் பட்டுள் ளது.

**<u>வாழ்க்கை தரம் உயர்வு</u>**

இந்த பயனாளிகள் அனை வரும் பால் கூட்டுறவு சங்கங்க ளின் உறுப்பினராக சேர்க்க வும், ஆவின் நிறு வனத்தின் மூலம் பயனாளிகள் உற்பத்தி செய்யும் பாலை கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

எனவே, கறவைப்பசுக்கள் பெற்ற பயனாளிகள் மதுக் குற்றச் செயல்களில் ஈடு படாமல் தங்களின் வாழ்க்கை தரத்தை இத்திட்டத்தின் மூலம் உயர்த்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல்துறை கண் காணிப் பாளர் .ஜியாவுல் ஹக் உதவி ஆணையர் (கலால்) சூரிய மூர்த்தி, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) டாக்டர் சந்திரசேகர், கால் நடை மருத்துவ அலுவலர் டாக்டர் பாஸ்கர், கோட்ட கலால் அலுவலர் தமிழரசி (அரியலூர்), முத்துகிருஷ்ணன் (உடையார்பாளையம்) மற்றும் அரசு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வாழைத்தார் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை**



**நொய்யல்,**

வாழைத்தார் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

**ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை**

கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என் புகழுர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும்,

வியாபாரி களுக்கும் விற்பனை செய்கின்ற னர். சில வியாபாரிகள் வாழைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துக் கொள் கின்றனர். வாழைத் தோட்டத் தில் விளையும் வாழைத் தார்களை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

<u>விலை வீழ்ச்சி</u>

கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.300–க்கும், ரஸ்தாளி ரூ.250–க்கும், கற்பூரவள்ளி ரூ.200–க்கும், பச்சை நாடன் ரூ.150–க்கும், மொந்தன் ரூ.600–க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

நேற்று பூவன் வழைத்தார் ரூ.200–க்கும், ரஸ்தாளி ரூ.150–க்கும், கற்பூரவள்ளி ரூ.150–க்கும், பச்சை நாடன் ரூ.100–க்கும், மொந்தன் ரூ.300–க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர்.

<u>விவசாயிகள் கவலை</u>

இப்போது திருவிழா நிகழ்ச்சிகள் முகூர்த்தங்கள், கும்பாபிஷேகங்கள் போன்ற விஷேசங்கள் அதிக அளவில் இல்லாததால் வாழைத்தார் விலை சரிவடைந்து உள்ளது. வாழைத்தார் விலை சரிந்ததால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்து உள்ளனர்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் மானியவிலை வைக்கோல் விற்பனை மையங்கள் மீண்டும் திறப்பு பழைய கொள்முதல் ஒப்பந்தம் ரத்து**

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் மானிய விலை வைக்கோல் விற்பனை மையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட இருக்கின்றன.

<u>மானிய விலை வைக்கோல்</u>

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் வறட்சியால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதை தவிர்க்கும் வகையில் மானிய விலையில் வைக்கோல் வழங்க, முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் கோபால்பட்டி, வத்தலக்குண்டு, வேடசந்தூர், குஜிலியம்பாறை, தேவத்தூர் ஆகிய பகுதிகளில் மானிய விலை வைக்கோல் மையங்கள் தொடங்கப்பட்டன. இந்த மையங்கள் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் செயல்படுகின்றன.

<u>ஒப்பந்தம் ரத்து</u>

இந்த 5 கிட்டங்கிகளுக்கும் தேவையான வைக்கோல் தனியாரிடம் வாங்கப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால், 5 மையங்களுக்கு வைக்கோல் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் வைக்கோல் விற்பனை மையங்கள் தொடர்ந்து செயல்படாத நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக கறவை மாடுகள் வளர்ப்போர் பெரும் சிரமம் அடைந்தனர். இதனை தொடர்ந்து வைக்கோல் மையங்களை முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டு வரும்படி கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டார். இதன் முதல்கட்டமாக வைக்கோல் பெறுவதற்கான பழைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

<u>மீண்டும் விற்பனை</u>

இதையடுத்து புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, வைக்கோல் கொள்முதல் செய்வதற்காக 4 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த 4 நிறுவனங்கள் மூலம் வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஒருசில நாட்களில் 5 மையங்களிலும் மானிய வைக்கோல் விற்பனை முழுமையாக நடைபெறும் என்று கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் ரவிச்சந்திரன் தெரிவித்தார்.